**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 212 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 1** |
| **Name** | : | **திருமதி. சித்ரா** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.10.2023**

எதிரிகள் 1,2 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

1990 ம் வருடம் நாங்கள் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு வந்தோம். எனது மகள் சாருலதா 1996 ம் வருடம் தான் பிறந்தார். நாங்கள் குடியிருந்த காலனியில் எங்களைப் போல் இலங்கையில் இருந்து வந்தவர்கள் சுமார் 900 குடும்பங்கள் இருந்தது. எதிரி கஜேந்திரன் குடும்பம் எங்களுக்கு திருமணத்தின் போது தான் அறிமுகம் என்றால் சரிதான். எதிரியின் குடும்பமும் எங்கள் குடும்பமும் வெவ்வேறு ஊர்களில் இருந்தது. எப்படி அவர்களைத் தெரிந்து கொண்டீர்கள் என்றால் அவர்களாகப் பெண் கேட்டு வந்தார்கள். யார் மூலம் எங்களை எதிரி குடும்பத்தார் தெரிந்து கொண்டார்கள் என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் இலங்கையில் நாங்கள் குடியிருந்த வீட்டிற்கு பக்கத்து வீட்டில் குடியிருந்த ராஜம் என்பவர் இந்தியாவிற்கு வந்து சேலத்தில் எதிரியின் பக்கத்து வீட்டில் குடியிருந்தார்.

அவர் மூலம் எதிரியின் குடும்பத்தார் பெண் கேட்டு வந்தார்கள் என்று தெரிந்து கொண்டேன். இந்து சம்பரதாயப்படி நாங்கள் திருமணம் செய்து கொடுத்தோம். திருமணம் ஆன பிறகு, குழந்தை பெற்றுக்கொள்ளும் வரை அவர்கள் சேலத்தில் தான் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். மகப்பேறு நடந்தது மதுரை அரசு ராஜாஜி மருத்துவனையில் நடந்தது. குழந்தை பிறப்பதற்கு எத்தனை மாதத்திற்கு முன்பு எங்கள் வீட்டிற்கு கூட்டிவந்தோம் என்றால் எனது மகள் 7 மாதம் கர்ப்பமாக இருந்த போது வளைகாப்பு போட்டு எங்கள் வீட்டிற்குக் கூட்டிவந்தோம். எனது கணவர் பெயின்டிங் வேலை பார்த்து வந்தார். எனது கணவருக்கு தலையில் முடியில்லாமல் வழுக்கையாகத்தான் இருக்கும் என்றால் சரிதான். எனது மகள் குழந்தை பிறந்த பிறகு எந்தெந்த தேதியில் சேலத்திற்குச் சென்றார் என்றும் எந்தெந்த தேதியில் வந்தார் என்ற தேதிகளை குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகள் குழந்தை பிறந்த பின்னர் சேலத்திற்கே போகவில்லை என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த 3 மாதங்களிலேயே சேலத்தில் கொண்டு விட்டுவிட்டு வந்துவிட்டேன். எனது மகள் திருமணத்திற்கு போட்ட 8 பவுன் நகையை நாங்கள் வாங்கி அடகு வைத்து செலவு செய்துவிட்டோம் என்றும் அந்த நகைகளை எதிரி திருப்பி கேட்டதால் தான் என் மகளை சேலத்திற்கு நாங்கள் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. புகாரிலும், எனது முதல் விசாரணையிலும்,என் மகள் குழந்தை பிறப்பதற்கு முன்பாக எனது மகளும் எதிரி கஜேந்திரனும் சந்தோஷமாகத்தான் இருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால் எனது மகளுக்கும், எதிரி கஜேந்திரனுக்கும் இடையே எந்த மன வருத்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த தேதியில் என் மகள் சேலத்தில் தூக்குப்போட முயற்சி செய்தார் என்றும் நான் எந்த தேதியில் சேலத்திற்குப் போனேன் என்று புகாரிலும் எனது முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு அந்த தகலை யார் சொன்னார்கள் என்றால் 1 வது எதிரி கஜேந்திரன் என் கணவரிடம் சொன்னார். கஜேந்திரன் தான் மேற்படி விஷயத்தை சொன்னார் என்று புகாரிலும் முதல் விசாரணையிலும்

சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. புகாரை என் வீட்டுக்காரர் தான் கொடுத்தார் என்றால் சரிதான். நான் தற்போது சொன்ன விபரங்கள் எதையும் என் கணவர் புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் என் கணவருக்கு தலையில் முடியில்லை என்பதால் சூப்பர் வாஸ்மால் என்ற மருந்தை அவர் வாங்கி உபயோகப்படுத்துவது இல்லை என்றால் சரிதான். எனது மகளின் குழந்தையை எதிரிகள் தங்களுக்கு வேண்டும் என்று என் கணவரிடம் கேட்டார்கள். குழந்தை 10 மாத குழந்தையாக உள்ளதால் பிரித்து கூட்டிச் செல்லக் கூடாது என்று பக்கத்து வீட்டுக்காரர்கள் சொன்னார்கள். அவ்வாறு சொன்ன நபர்கள் யார் என்ற விபரத்தை என் கணவர் கொடுத்த புகாரிலும், எனது முதல் விசாரணையிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் புகார் கொடுக்கும்போது நான் உடன் இல்லை. அதனால் புகாரில் என்னென்ன தகவல் சொல்லப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். நான் வீட்டில் இல்லாத போது என் மகள் மருந்தைக் குடித்துவிட்டது என்று என் கணவர் புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என் மகளுக்கு தற்கொலை எண்ணம் கொஞ்ச நாளாக இருந்து வந்தது என்றால் அவர்கள் போன் செய்து போன் செய்து கேட்டதால் என் மகளுக்கு தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் இருந்து வந்தது. 1 வது எதிரி என் மகளுடன் போனில் பேசும்போது நான் அருகில் இருப்பேனா என்றால் அவர் தனியாகத்தான் பேசுவார். 1 வது எதிரி, என் மகளுடன் என்ன பேசினார் என்று நேரடியாக எனக்குத் தெரியாது. என் மகள் என்னிடம் சொல்லித்தான் எனக்குத் தெரியும். எத்தனை மாதமாக 1 வது எதிரியும் என் மகளும் 2,3 மாதங்களாக பேசிக்கொண்டிருந்தார்களா என்றால் 10, 15 நாட்களாகத்தான் பேசினார்கள். என் மகள் மகப்பேறுக்குப் பிறகு சேலத்திற்குச் செல்லாமல் எங்கள் வீட்டிலேயே இருந்ததால் தான் 1 வது எதிரி என் மகளுக்கு போன் செய்து எப்போது வீட்டிற்கு வருவாய் என்று தான் போனில் கேட்டார் என்றால் சரியல்ல. நாங்கள் என் மகளுக்குப் போட்ட நகைகள் அனைத்தையும் வாங்கி அடகு வைத்து விட்டு திருப்பித்தர முடியாமல்

போனதால், என் மகள் வெட்கப்பட்டுக்கொண்டு அவரது கணவர் வீட்டிற்குப் போகாமல் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. என் மகள் உறவையே தப்பாகப் பேசியும், எனது மகளுக்குப் பிறந்த குழந்தை தனக்குப் பிறந்த குழந்தை இல்லை என்றும் 1 வது எதிரி சொன்னதால் தான் என் மகள் மனவருத்தத்துடன் இருந்தார். இந்த விபரத்தை போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எனது மகளின் திருமணத்திற்கு முன்பாக மதுரையில் எங்கள் வீட்டிற்கு அருகில் என் மகளுக்கு ஆண் நண்பர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. அதன் காரணமாகவும் என் மகள் தன்னுடைய கணவர் வீட்டிற்குப் போக மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. இந்த விஷயம் வெளியில் தெரிந்த பிறகு தான், 1 வது எதிரி என் மகளை தன்னுடன் வா இல்லாவிட்டால் விவாகரத்து கொடு என்று நேரில் வந்து கேட்டார் என்றால் அவ்வாறு கேட்கவில்லை. என் கணவர் கொடுத்த புகாரில் விவாகரத்து கொடு என்று மதுரையில் வந்து கேட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. போன் மூலியமாகத்தான் கேட்டார். என் கணவர் கொடுத்த புகாரில், 20 நபர்களுடன் வந்து குழந்தையைக் கொடு என்று கேட்டார்கள் என்றும் விவாகரத்து கொடு என்று கேட்டார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 21.05.2016 ம் தேதியன்று நான் வேலைக்குப் போயிருந்த போது என் மகள் மருந்தைக் குடித்துவிட்டதாக சொல்லியுள்ளேன். மதியம் வேலை முடிந்து 02.00 மணிக்கு வீட்டிற்கு வந்த பிறகு தான் அது பற்றி தெரிந்து கொண்டேன். நான் தான் என் மகளை ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்றேன். மருத்துவமனையில் என் மகளை சேர்க்கும் போது என் மகளுக்கு தொண்டையில் வலி என்று சொல்லி தான் சேர்த்தேன் என்றால் சரியல்ல. நான் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் போகும்போதே 3 வாஸ்மால் பாட்டில்களை எடுத்துச் சென்று காண்பித்தேன். அந்த பாட்டில்களை மருத்துவர்கள் வாங்கி வைத்துக்கொண்டார். என் மகள் மருந்தைக் குடித்து ஆஸ்பத்திரியில் சேர்த்த பிறகு உயிருடன் எங்கள் வீட்டிற்கு போகவில்லை. 21.05.2016 ம் தேதி முதல் 02.06.2016 வரை என் மகள் உயிரோடு தான் இருந்தார் என்றால் சரிதான். என் மகள் அப்போது

சுயநினைவு இல்லாமல் இருந்தார். என் மகளுக்கு மருத்துவர்கள் கொடுத்த மருந்தை வாய் மூலமாகவும், நரம்பு மூலமாகவும் கொடுத்தார்கள் என்றால் சரிதான். என் மகளுக்கு வாய் மூலமாக மருந்து கொடுத்த போது அதை வாங்கி வாய் மூலமாக குடித்தபோது சுயநினைவுடன் தான் இருந்தார். சுமார் 9 நாட்கள் கழித்து 30.05.2016 ம் தேதியன்று என் கணவர் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த 9 நாட்களுக்கும் நானும் என் கணவரும் மாறி மாறி வீட்டிற்குப் போய் வந்தோம் என்றால் சரியல்ல. என் கணவர் மட்டும் தான் போய் வந்தார். 1 வது எதிரி தகவல் சொல்லி 4 நாட்கள் மருத்துவமனையில் இருந்தார் என்றால் எனக்குத் தெரியாது. வந்திருப்பதாகச் சொன்னார்கள். என் கணவர் கொடுத்த புகாரிலும், என்னை RDO விசாரணை செய்த போதும், அதற்குப் பிறகு போலிசார் என்னை விசாரித்தபோதும், என் மகள் எழுதி வைத்த கடிதம் ஒன்று உள்ளதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுக்கும்போதே அந்த கடிதத்தை போலிசில் கொடுத்துவிட்டோம். புகார் கொடுக்கும்போதும், அதன் பின் RDO வின் விசாரணையிலும், போலிசார் விசாரணையிலும் அந்த கடிதம் பற்றி சொல்லவேயில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு அந்த கடிதம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மகள் படிக்கும்போது இருந்த நோட்டு புஸ்தகங்களை போலிசார் விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் எனக்கு நினைவில்லை. இந்த கடிதத்தைத் தவிர என் மகள் கையெழுத்து உள்ள வேறு எந்த ஆவணமும் காவல்துறையினரிடம் இல்லை என்றால் எனக்குத் தெரியாது. என் மகள் 02.06.2016 ம் தேதி இறக்கும் வரை, மருத்துவர் கொடுத்த மருந்துகளை வாங்கி சாப்பிட்டுக்கொண்டிருந்த போது, காவல்துறையினரோ, நீதிபதியோ வந்து விசாரணை செய்தார்களா என்றால் காவல்துறையினர் வந்து விசாரித்தார்கள். அவ்வாறு காவல்துறை அதிகாரிகள் விசாரணை செய்தபோது, என் மகள் என்ன நடந்தது என்று சொன்னாரா என்றால் என் மகளுக்குப் பேச இயலவில்லை. ஆனால் என்னை போலிசார் வெளியே அனுப்பிவிட்டார்கள். எவ்வளவு நேரம் என்னை வெளியில் அனுப்பிவிட்டு விசாரணை செய்தார்கள் என்றால் சுமார் 10 நிமிடம்

விசாரித்தார்கள். அவ்வாறு விசாரிக்கும் போது உடன் டாக்டர் இருந்தார்களா என்றால் ஆமாம். என் மகளை விசாரணை செய்த போது அவர் தனது கணவர் மீதோ, அவரது மாமியார் மீதோ எந்த குற்றச்சாட்டும் சொல்லவில்லை என்றும் அதனால் தான் அது மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதசாஆ.1 கடிதம் என் மகள் எழுதியதே கிடையாது என்றால் சரியல்ல. என் மகளுக்கு மரணம் ஏற்படும் வரை அவ்வாறு ஒரு கடிதம் எழுதவேயில்லை என்பதால் தான் என் கணவர் புகார் கொடுக்கும் போதும், RDO மற்றும் போலிசார் விசாரணையின் போதும் அந்த கடிதம் பற்றி சொல்லவேயில்லை என்றால் சரியல்ல. அந்த கடிதத்தை என் மகள் படுத்திருந்த தலையணைக்கு அடியில் இருந்தது.

**நீதிமன்ற கேள்வி :** என் மகள் அதசாஆ.1 கடிதத்தை அவள் படுத்திருந்த கட்டில் தலையணைக்கு அடியில் தான் வைத்திருந்தாள். விஷம் அருந்திய பிறகு என் மகள் மருத்துவமனையில் இருந்த பிறகு 9 நாட்கள் கழித்து என் கணவர் புகார் கொடுத்தார். என் கணவர் 5,6 நாட்கள் கழித்து அந்த அதசாஆ.1 கடிதத்தை எடுத்துவிட்டார்.

நான் சொன்னது போல் தலையணையின் அடியில் எந்தவிதமான கடிதமும் இல்லை என்றும் அந்த கடிதம் 04.06.2016 ம் தேதியன்று இந்த வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் தான் 03.06.2016 ம் நாள் நடந்த RDO விசாரணையிலும், 02.06.2016 ம் நாள் நடந்த பிரேத விசாரணையின் போதும் அதசாஆ.1 கடிதம் துலக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 வது எதிரி தன்னுடைய மனைவிக்கு விஷத்தைக் கொடுத்துவிட்டார்கள் என்று விஷயம் தெரிந்து அவர் வந்து எங்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக பிரச்சனை செய்தார் என்றும் அதனால் நான் நாங்கள் எதிரிகள் மீது புகார் கொடுத்துவிட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. RDO விசாரணையின் போது, என் மகளின் மரணத்திற்கு வரதட்சணை கொடுமை காரணம் இல்லை என்று அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சேலத்தில் எதிரிகளின் வீட்டிற்குப் பக்கத்தில் தான் இலங்கையில் இருந்து

வந்த ராஜலெட்சுமி என்பவர் வீடும் உள்ளது என்றால் சரிதான். சேலத்தில் இலங்கையைச் சேர்ந்த குடும்பங்கள் எத்தனை உள்ளது என்று எனக்குத் தெரியாது. என் மகளை திருமணம் செய்து கொடுத்து சேலத்திற்கு சென்று விட்டுவிட்டு வந்த பின்னர், என் மகள் வளைகாப்பிற்குச் சென்றது தவிர எத்தனை முறை நான் சேலத்திற்குச் சென்றுள்னேன் என்றால் 2 முறை சென்றுள்ளேன். அந்த 2 முறை என்பது, திருமணம் முடிந்து என் மகளை விட்டுவிட்டு வந்தது மற்றும் வளைகாப்பிற்கு சென்று என் மகளை அழைத்து வந்தது ஆகும். பொதுவாக மாப்பிள்ளை வீட்டில் தான் வளைகாப்பு நடக்கும் என்றால் சரிதான். அவ்வாறு வளைகாப்பு விழாவிற்குச் சென்றபோது, அந்த வைபவத்திற்கு வந்தவர்கள் யார் யார் என்றும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு வந்தவர்களுக்குள் ஜாதி வேற்றுமை கிடையாது என்றால் சரிதான். என் மகள் மகப்பேறுக்குப் பின் அவரது கணவர் 1 வது எதிரியின் வீட்டிற்குச் சென்றிருந்து, அங்கு வரதட்சணை கொடுமை செய்திருந்தால் அங்கு அக்கம் பக்கம் உள்ளவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. அவர்கள் வெளியில் தெரியாதவாறு பார்த்துக் கொண்டார்கள். இந்த வழக்கில் ராஜம் என்பவர் தவிர மற்ற சாட்சிகள் அனைவரும் எங்கள் வீட்டினை சுற்றி உள்ளவர்கள் தான் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் மகள் இறந்த பிறகு நடந்த பிரேத விசாரணையின் போது, 1 வது எதிரி என் மகள் இறக்கும்போது இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சொல்லவில்லை. ஆனால் 1 வது எதிரி அன்றைய தினம் வந்திருந்தார். அவரை போலிசார் கைது செய்து விட்டார்கள். 1 வது எதிரி அங்கேயே தான் இருந்திருந்தார் என்றும் 1 வது எதிரி எங்கள் மீது புகார் கொடுக்கப் போவதாக சொன்னார் என்றும் அதனால் நாங்கள் ஆலோசனை செய்து எதிரிகள் மீது என் கணவர் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சூப்பர் வாஸ்மால் குடித்து என் மகளுக்கு மரணம் ஏற்படவில்லை என்றும் என்ன மருந்து குடித்ததாக தெரியவில்லை என்று மருத்துவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்

என்று சொன்னால் சரியல்ல. சூப்பர் வாஸ்மால் தான் என் மகள் குடித்தார் என்று மருத்துவரிடம் சொல்லி அந்த 3 பாட்டில்களையும் நான்தான் மருத்துவரிடம் கொடுத்தேன். வழக்கை திசை திருப்புவதற்காகவும், நாங்கள் தப்பிபதற்காகவும் தான் சூப்பர் வாஸ்மால் பாட்டிலை நாங்கள் தயார் செய்தோம் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல், சொன்ன விதத்தில், என் மகள் சொன்ன விஷத்தை அருந்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 11 நாட்கள் மருத்துவமனையில் இருந்த போது, மருத்துவர்கள் இரத்தப் பரிசோதனைக்காக என் மகளிடம் உடலில் இருந்து இரத்தம், சிறுநீர், மலம் ஆகிய மாதிரிகளை எடுத்தார்களா என்றால் எடுக்கவில்லை. நான் நீதிமன்றத்தில் சொன்னது போல், வரதட்சனை கொடுமையோ, என் மகளுக்கு நான் சொன்னது போல் வேறு எந்த கொடுமையும் நிகழவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 212 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 2** |
| **Name** | : | **திரு. பாரதிதாசன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.10.2023**

எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

## குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :

நான் தற்போது மத்திய அரசின் குட்ஷெட்டில் கணக்குப்பிள்ளையாக வேலை பார்த்து வருகிறேன். நான் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். 2017 ம் வருடம் என்னை கணக்குப்பிள்ளையாக promotion செய்தார்கள். கடந்த 2014 ம் வருடம் நான் செக்யூரிட்டியாக வேலைக்குச் சேர்ந்தேன். என் வேலை நேரம் காலை 07.00 மணி முதல் மூடைகள் ஏற்றி இறக்கும் வரை மாலை சுமார் 06.00 மணி வரையோ அல்லது இரவு 09.00 மணி வரையோ அல்லது அல்லது மறுநாள் காலைவரையோ இருக்கும். எங்கள் வீடு, ஆனையூர் அகதிகள் முகாமில் உள்ளது. செக்யூரிட்டி வேலை என்பது, தினமும் வருகை பதிவேட்டில் கையெழுத்திட்டு தினமும் பார்க்க வேண்டிய வேலை என்றால் சரிதான். அகதிகள் முகாமில் சுமார் 270 முதல் 280 வீடுகள் உத்தேசமாக இருக்கும். எனது வீட்டிற்கும் அசா1 ன் வீட்டிற்கும் இடையே சுமார் 50 மீட்டர்

தூரம் இருக்கும். 50 மீட்டர் என்பது 150 அடி என்றால் சரிதான். அசா1 வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையே சுமார் 15 முதல் 20 வீடுகள் இருக்கும். அசா1 வீட்டிற்கு அருகில் உள்ள வீடுகளுக்குத் தெரியாத விஷயங்கள் எதுவும் 20 வீடுகள் தள்ளியுள்ள எனக்கு தெரிய நியாயம் இல்லை என்றால் சரிதான். ஆனால் மனிதாபிமானத்தினால் எனக்குத் தெரியும். நான் முதல் விசாரணையில் சொன்ன விஷயங்கள் எல்லாம் தெய்வேந்திரன் சொல்லி நான் கேள்விப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தெய்வேந்திரன் எனக்கு பாலிய நண்பர் மற்றும் குடும்ப உறவினர் ஆவார். அதனால் தெய்வேந்திரனுக்காக உண்மைக்குப் புறம்பாக கேள்விப்படாத சம்பவங்களைக் கேள்விப்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேள்விப்பட்ட சாட்சியம் உள்ளதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடிய சாட்சியம் அல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை